ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

17. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

18. (1) இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தமானது, எல்லா நோக்கங்களுக்காகவும், முதன்மைச் சட்டவாக்கம் தொடங்கும் திகதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க, நியமிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் புரியப்பட்ட தவறொன்றுக்கு அதன்கண் விவரிக்கப்பட்ட தண்டனை விதிக்கவும்படலாம்.

(2) முதன்மைச் சட்டவாக்கத்திற்கு இச்சட்டத்தின் 16 (2) ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தமானது—

(அ) அத்தகைய திருத்தம் மாகாண சபையொன்றின் ஆளுநர் ஒருவரை, மாகாணமொன்றின் அமைச்சர் சபையொன்றின் அமைச்சரை அல்லது மாகாண சபையொன்றின் உறுப்பினர், அலுவலர் அல்லது ஊழியர் ஒருவரை அல்லது மாகாண பகிரங்கச் சேவையின் உறுப்பினரொருவரைத் தொடர்புறுத்துகின்ற அளவில், எல்லா நோக்கங்களுக்காகவும் 1987 நவம்பர் 14 ஆம் திகதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய திருத்தம் வேறு எவரேனும் ஆளைத் தொடர்புறுத்துகின்ற அளவில், எல்லா நோக்கங்களுக்காகவும் முதன்மைச் சட்டவாக்கம் தொடங்கும் திகதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

